## பெட்டிக்குள் பிறந்தவர்கள்
## BORN IN A BOX

ஏறக்குறைய 720 கோடி மக்கள் தற்போது பூமியின் மீது உயிர்வாழ்கின்றார்கள். ஒவ்வொரு நாளும் மனிதர்கள் பிறக்கின்றனர், இறக்கின்றனர். அதனால், இந்த அறிமுகப் பகுதியை நீங்கள் வாசிக்கும் தேதியைப் பொறுத்து இந்த எண்ணிக்கையில் மாற்றமிருக்கலாம்.

2050–ஆம் ஆண்டிற்குள் உலக மக்கட்தொகையில் கிட்டதட்ட 1000 கோடி அளவிற்கு "ஜீவாத்துமாக்கள்" அதிகரிக்கக்கூடும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. எல்லா மனிதருடைய ஆவிகளும் ஒரே தேவனிடமிருந்து வந்தவைகள் தான். ஏனெனில், உலகில் இருக்கும் எல்லாருடைய அடிப்படைத் தேவைகளும் ஒரே மாதிரியானவை என்பதே இதற்கு சான்று. அதாவது, எல்லா குழந்தைகளுக்கும் உணவும், உடையும், பாதுகாப்பான இடமும் தேவைப்படுகின்றன. அதுமட்டுமின்றி, அவர்களுக்கு அன்பும், பாதுகாப்பும் தேவைப்படுகின்றன. எல்லாரும், நண்பர்கள் வேண்டுமென்று நினைக்கிறார்கள்; எதையாகிலும் சாதிக்கவேண்டுமென்ற எண்ணமும் யாவருக்கும் இருக்கின்றது. இப்பேர்ப்பட்ட தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள எல்லா நாடுகளிலும் உள்ள மக்கள் அயராது முயற்சித்துக்கொண்டிருக்கின்றார்கள். இந்த "ஜீவாத்துமாக்களை" உண்டாக்கின தேவனுக்குத்தான் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று நன்றாகத் தெரியும்; சரீரம் மற்றும் ஆவிக்குரிய சம்பந்தமான அவருடைய சட்டதிட்டங்களை மதித்து நடந்துகொள்பவர்கள் யார் யாரோ, அவர்களுக்கெல்லாம் இந்த தேவைகளை அவர் திருப்திப்படுத்துகிறார். *மத். 6:25-34.* எல்லாருடைய விருப்பமும் என்னவென்றால், தேவனும் மற்றவர்களும் தங்களை நல்ல விதமாகப் பார்க்கவேண்டும் என்பதுதான். நல்ல விதமாகப் பார்ப்பது என்பதை வேதாகமம், மகிமை என்று குறிப்பிடுகின்றது. தேவன் இந்த உலகத்தை உண்டாக்குமுன்பே, மகிமைக்கான மனிதருடைய தேவையை நிறைவு செய்யக்கூடிய ஒரு திட்டம் அவர் மனதில் இருந்தது. *1 கொரி. 2:7.*

எல்லா ஜீவன்களையும் உண்டாக்கின தேவனே மனிதனுடைய





ஆவியையும் உண்டாக்குகிறார். இந்த ஆவி, தாயின் கருவில் உடல் உருவாக ஆரம்பிக்கும் போதே அதற்குள் நுழைந்துவிடுகின்றது. *லூக்கா 1:41.* இந்த ஆவியே மனதும், இதயமும், மனச்சாட்சியும் கொண்ட உள்ளான மனிதனாக உருவாகின்றது. *எபே. 4:22-24.* இந்த உள்ளான மனிதன் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டிருக்கின்றான்; ஆகையால், குழந்தையின் வெளித்தோற்றம் தாய் அல்லது தகப்பனைப் போல் இருக்கின்றது. ஒவ்வொரு குழந்தையின் உள்ளான மனிதனும் தேவனுடைய "சாயலாய்" இருப்பதால், தேவனை ஸ்தோத்திரியுங்கள்! இயேசு, தாம் தேவனுடைய குமாரன் என்று உரிமையோடு பேசிய போது *சங். 82:6-8* வசனங்களை மேற்கோள் காட்டினார், அப்போது அவர் மனதிற்குள் இந்த விஷயம் இருந்திருக்கலாம்: "தேவர்களாயிருக்கிறீர்கள் என்று நான் சொன்னேன் என்பதாய் உங்கள் வேதத்தில் எழுதியிருக்க வில்லையா?" *யோ. 10:33-36.* "எல்லாருக்குள்ளும் சிறிது நற்குணம் இருக்கின்றது" என்று பொதுவாகச் சொல்லப்படுகின்றது. உண்மை யென்னவென்றால், நம் யாவருக்குள்ளும் தேவனுடைய நற்குணம் கொஞ்சம் இருக்கின்றது. குழந்தைகள் மத்தியில் காணப்படுகின்ற இந்த நற்குணத்தை நம்முடைய முழு குணாதிசயமாக மாற்றிக்கொள்ளவேண்டும். *மத். 18:2-4.*

எல்லா மனிதரும் தேவனுடைய பிள்ளைகளாகத் தங்களை வளர்த்துக்கொள்ளும் தன்மைகொண்டவர்களே. *மத். 5:9,16,48.* நம்முடைய ஆவி தேவனிடமிருந்து வந்திருக்கிறதினாலும், நாம் அவருடைய சாயலிலேயே படைக்கப்பட்டிருப்பதினாலும் இவ்விதமாக நாம் மாறமுடியும். *எபி. 12:9; யாக். 3:9.* அநேகர் தங்களுக்குள் இந்தத் தன்மையை வளர்த்துக்கொள்ள முடியாமற்போவதற்குக் காரணம், அவர்கள் தங்களை தேவன் எப்படிப் படைத்தார், எதற்காகப் படைத்தார் என்று வசனத்தின் அடிப்படையில் கற்றுக்கொள்ளாததும், தங்கள் "விசுவாசத்தின் கதவினை" திறக்காததுமே ஆகும்.

இப்போதுள்ள இந்த 720 கோடி "ஜீவாத்துமாக்களும்" ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் இந்தப் பூமியில் இருப்பார்கள். எங்கள் ஆயுசு

நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷம் என்று மோசே முன்பே சொல்லியிருக்கிறான். *சங். 90:10.* மனிதனுடைய ஆவி அவனுடைய சரீரத்தை விட்டுப் பிரிகின்றபோது, அவனுக்கு சரீர மரணம் ஏற்படுகின்றது. *யாக். 2:26.* ஒவ்வொருவனுடைய உள்ளான மனிதனும் அவனுடைய சரீரத்தை விட்டுப் பிரிந்த பிறகு குறிப்பிட்ட ஒரு காலத்தில் தேவனிடம் திரும்பப் போய் சேரும். *பிரசங்கி 12:7; எபி. 9:27,28.* சரீர மற்றும் சமுதாய சூழல்களால் உருவாக்கப்பட்ட வித்தியாசமான சூழ்நிலைகளில் ஒவ்வொரு மனிதனும் பிறந்திருக்கிறான். ஒரே குடும்பத்தில் உள்ள பிள்ளைகளும் கூட இப்படித்தான் பிறக்கிறார்கள். இந்தச் சூழ்நிலை மனிதனைச் சுற்றி ஒரு பெட்டியைப் போல் உருவாகிவிடுகின்றது, ஏராளமான எண்ணிக்கையில் உள்ள யாவரும் இந்த "சூரியனுக்குக் கீழே வாழும்" நாட்களெல்லாம் இந்தப் பெட்டிக்குள்ளே அடைபட்டுக் கிடக்கின்றார்கள். சரீரத்துடன் இந்தப் பூமியின் மீது வாழும் மனித குலத்தின் வாழ்க்கையைப் பற்றி சாலொமோன் ராஜா யூக அடிப்படையிலான ஞானத்தை பயன்படுத்தி பிரசங்கி புத்தகத்தில் விவரிக்கின்றான்.

*பிரசங்கியாகிய நான் எருசலேமில் இஸ்ரவேலருக்கு ராஜாவாயிருந்தேன். வானத்தின்கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்கு என் மனதைப் பிரயோகம்பண்ணினேன்; மனுபுத்திரர் இந்தக் கடுந்தொல்லையில் அடிபடும்படிக்குத் தேவன் அதை அவர்களுக்கு நியமித்திருக்கிறார்.* **சூரியனுக்குக் கீழே** *செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது. பிரசங்கி 1:12,13,14.*

தேவனிடமிருந்து ஆவியைப் பெற்று, இந்தப் பூமியின் மீது சரீரத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மனிதனுடைய வாழ்க்கையை பற்றிய இந்தப் புத்தகத்தில் ஏறக்குறைய 24 முறை சூரியனுக்குக் கீழே என்ற சொற்றொடரை பயன்படுத்துகிறான். ஒவ்வொரு மனிதனும் சிறு வயது முதலான அவனுடைய வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் நன்மைதீமை பற்றிய அறிவை அடைந்து பொறுப்புள்ளவனாகிறான். *ஆதி. 3:22.* தேவனுடனான உடன்படிக்கையை முறித்துப்போட்டதற்காக





ஆதாம் ஏவாளை நாம் குற்றப்படுத்த முடியும்; எப்படியிருந்தாலும், வளர்ச்சியடைந்த எல்லா மனிதரும், தீமைக்குப் பதில் நன்மையை தேர்ந்தெடுக்கும் கடமையை நிறைவேற்ற இப்போதும் போராடிக்கொண்டிருக்கின்றார்கள். *ரோமர் 12:21.* மக்கள் மதத்தைச் சார்ந்திருக்கிறார்களோ இல்லையோ, வளர்ச்சி பெற்ற ஒவ்வொருவரும் நன்மை, தீமை உண்டென்பதை நம்புகிறார்கள். "வாழ்க்கை" என்றால் என்ன என்பதைப் பற்றி விவரிக்கின்ற தேவனையும், அவருடைய சட்ட திட்டங்களையும் நாம் அடையாளம் கண்டுகொள்ளாவிட்டால், சாலொமோன் சொல்வது போல் "அர்த்தமற்றதாக" இருக்கும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுடைய உபதேசங்களே தேவனுடைய புதிய உடன்படிக்கையில் ஜீவப் பிரமாணங்களாய் இருக்கின்றன. *யோவான் 1:1-5; எபிரெயர் 8:10* வசனங்களைப் பார்க்கவும்.

"சூரியனுக்குக் கீழே" இருக்கிற பலதரப்பட்ட வாழ்க்கையைப் பற்றிய ஞானத்தை தேவன் சாலொமோனுக்குக் கொடுத்தார். அவனுடைய பூமிக்குரிய ஞானத்தைப் பற்றி நாம் பார்க்கும்பொழுது, அதிலே அவனுக்குச் சரியானவன் அவனுக்கு முன் இருந்ததுமில்லை, அவனுக்குப் பின் எழும்பினதுமில்லை. *1 இராஜாக்கள் 4:29-34.* "சூரியனுக்குக் கீழே" மனிதன் வாழும் வாழ்க்கையைப் பற்றி அவன் தீரயோசித்து, கடைசியாக இரண்டு முடிவுகளை முன்வைக்கிறான். முதலாவது முடிவு என்னவென்றால், மனிதனுடனான தேவனுடைய முதல் உடன்படிக்கையை ஆதாமும், ஏவாளும் உடைத்துப் போட்டதினால், எல்லா மக்களுக்கும் ஏற்பட்ட பாதிப்பே ஆகும். "மூடன் எப்படிச் சாகிறானோ அப்படியே ஞானியும் சாகிறான்." *பிரசங்கி 2:16; ஆதி. 2:15-17; 1 கொரி. 15:22.*

"சூரியனுக்குக் கீழே" ஒரு பெட்டியில் அடைக்கப்பட்டது போன்றதொரு வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக்கும் மனிதர்கள் உயர்ந்த அந்தஸ்து உடையவர்களாக இருந்தாலும் (அ) தாழ்ந்த நிலையில் இருந்தாலும், அநேகக் காரியங்களை சாதித்திருந்தாலும் (அ) ஒன்றுமே செய்யாதிருந்தாலும் எல்லாருக்கும் ஒரே முடிவு ஏற்படுகின்றது, எல்லாருமே மரிக்கிறார்கள். இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் அவதரித்து

“கிருபையையும், சத்தியத்தையும்” மனிதனுக்குக் கிடைக்கும்படி செய்யாமற்போயிருந்தால், ஒட்டுமொத்த மனித வாழ்வும் அர்த்தமற்றதாக, காற்றைத் துரத்தும் ஒரு முயற்சியாகவே இருந்திருக்கும். *யோவான் 1:17.* தேவனுடைய ராஜ்யத்தில் நித்திய ஜீவனை அனுபவிப்பதைக் குறித்து இயேசுகிறிஸ்து பெற்றிருந்தது போன்ற **தேவனுடைய ஞானத்தை** சாலொமோன் பெற்றிருக்கவில்லை; இருந்தாலும், நன்மை, தீமை இவ்விரண்டையும் பகுத்தறிந்து நடந்துகொள்ளும் பொறுப்புணர்ச்சி மக்களுக்கு உள்ளது என்ற அறிவை பெற்றிருந்தான். இதுவே சாலொமோன் மக்களுக்கு முன் வைக்கின்ற இரண்டாவது முடிவாகும்.

*காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும்,* ***நன்மையானாலும் தீமையானாலும்****, தேவன் நியாயத்திலே கொண்டுவருவார். பிரசங்கி 12:13-14.*

நம் ஒவ்வொருவருடைய பிறப்பிலும் இருக்கின்ற வேறுபட்ட சூழல் நம்மைச் சுற்றி ஒரு பெட்டியாக உருவாகிவிடுகின்றது. நாம் அதற்குள்ளேயே வாழ்கின்றோம். உதாரணத்துக்கு, 1929-ல் அமெரிக்காவின் அர்க்கன்சாஸ் மாகாணத்தில், வெள்ளை இனத்தைச் சேர்ந்த தாய் தகப்பனுக்குப் பிறந்த குழந்தை ஒரு பெட்டிக்குள், அதாவது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் வளர்ந்தது. அசுத்தமான சாலையோரம் ஒரு ஆப்பிரிக்க, அமெரிக்கத் தம்பதிக்குப் பிறந்த குழந்தைக்குச் சுற்றுச் சூழல் வேறுபடுகின்றது. ஆகவே இந்தக் குழந்தை ஒரு வித்தியாசமான பெட்டிக்குள் வாழ்க்கையை வாழ ஆரம்பிக்கிறது. இந்த 2 குழந்தைகளின் “வாழ்க்கை பெட்டிகள்” ஆப்பிரிக்கா, ஐரோப்பா என்ற பெருத்த வித்தியாசத்தைக்கொண்டிருக் கின்றன. இந்த 2 பிள்ளைகளும் வித்தியாசமானவர்களாக வளர்ந்து பெரியவர்களாகிறார்கள். இந்த உலகில் உள்ள 720 கோடி மக்களின் கைரேகையும், மரபணுவும் ஒருவருக்கொருவர் வித்தியாசப்பட்டிருப்பதால், சட்ட அமைப்பின் மூலம் ஒவ்வொருவரையும் அடையாளம் காண்பது





எளிமையாக இருக்கின்றது.

குழந்தைகள் மற்றவர்களைப் பார்த்து, கற்றுக்கொண்டு, தங்களைச் சுற்றி தங்களுக்கென்ற ஒரு சுற்றுச் சூழலை (வாழ்க்கை பெட்டி) மனதளவில் உருவாக்கிக்கொள்கின்றனர். நமக்குள் நாம் வருட கணக்கில் வளர்த்துக்கொண்ட தனித்தன்மையுடைய சில குணங்கள் நமது சமுதாய தேவையை நிறைவு செய்வதில் பயன்படுவது இல்லை. அதே வேளையில், “சூரியனுக்குக் கீழே” நமது சிருஷ்டிகர் நமக்கென்று வைத்துள்ள நோக்கத்தை அடைவதற்கும் இவைகள் நமக்குப் பயன்படுவதில்லை. நாமே சொந்தமாகக் கேட்டு, படித்து, சிந்தித்துச் செயல்படும் சக்தியை பெறும் வரையில், மற்றவரிடமிருந்தே நாம் அநேகக் காரியங்களை கற்றுக்கொள்கிறோம் என்பது வாழ்க்கையின் யதார்த்தமாக இருக்கிறது. இளம் பிராயத்திலிருந்தே **நமக்காக நாமே சிந்திக்க ஆரம்பித்து விடுகிறோம்**, இருந்தாலும், வாலிபப் பருவத்தை அடையும் போது நமக்கு **அவசியம்** என்று நாம் நினைத்தால், நமது குடும்பம் நம்மை வைத்திருக்கிற “வாழ்க்கை பெட்டியிலிருந்து” நம்மால் முழுவதுமாக வெளியில் வந்துவிடமுடியும். அப்பொழுதும், நாம் வாழ்கின்ற சமுதாயத்தை கட்டுப்படுத்துகின்ற மனிதனுடைய ஞானத்தின் அடிப்படையிலேயே நம்முடைய மன/ஆவிக்குரிய சுற்றுச் சூழல் அமைகின்றது. “மக்கள் வழக்கமாகத் தங்களுடைய பெற்றாருடைய (அ) உறவினர்களுடைய மதத்தையே ஏற்றுக்கொள்கின்றனர்” என்ற கருத்து நிலவுவதற்கு இதுவே காரணமாக இருக்கலாம்.

மேலே நாம் பார்த்து வந்த விஷயங்கள் எல்லாமே, “சூரியனுக்குக் கீழே” இந்தக் கணம் வாழ்ந்துகொண்டிருக்கின்ற 720 கோடி மக்களும் எப்படி அவர்கள் **தேர்ந்தெடுக்காத** சுற்றுச் சூழலில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. நாமாகவே நமது சுற்றுப்புற சூழலாகிய “வாழ்க்கைப் பெட்டியில்” இருந்து வெளிவர முடிவு எடுத்தாலே ஒழிய, நம் மரணம் வரையிலும் அதினின்று வெளிவர முடியாது. “என்னுடைய முடிவுகளை நானே எடுப்பேன்” என்ற தீர்மானம் அநேக வாலிபருக்குள்ளே இருக்கிறது, ஆயினும் அவர்களுடைய மனமும்,

இருதயமும், மனச்சாட்சியும், உடலும் பக்குவம் பெறும் வரையிலும் அந்த சுற்றுச் சூழல் பெட்டியிலிருந்து அவர்களால் வெளிவரவே முடிவதில்லை. மனிதன் தனக்கு மற்றவர்கள் சொல்லிக் கொடுத்த விஷயங்களை மனதிற்கொண்டு எப்பொழுதுமே உலகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தால், அவன் அடைக்கப்பட்ட பெட்டியிலிருந்து வெளிவர முடியாது. இந்தப் பாடத் தொகுப்பின் நோக்கம் என்னவென்றால், நாம் வாழ்வதற்கேற்ற மன மற்றும் ஆவிக்குரிய சுற்றுச் சூழலை தேவனே உருவாக்கிக் கொடுக்கும்படி அவரிடம் நம்மை அர்ப்பணிக்க உதவுவது தான். நாம் அவருடைய வார்த்தையைப் படித்து, அதை விசுவாசித்து, அதன்படியே வாழ நம்மை ஒப்புக்கொடுப்போமானால், இதை அவரால் செய்யமுடியும்.

பல்வேறு விதமான "வாழ்க்கைப் பெட்டிகளை" பற்றி நாம் கற்றுக்கொள்ளப்போகிறோம். நீங்கள் தற்சமயம் வாழ்ந்துகொண்டிருக்கின்ற "வாழ்க்கைப் பெட்டியின் மூடியைத் திறந்து" வெளியே வந்து, "வரப்போகின்ற வாழ்க்கைக்கு" உங்களை தகுதிப்படுத்தக்கூடிய அறிவுரைகளையும் நாங்கள் வழங்க இருக்கிறோம். *1 தீமோ. 4:8.* தற்பொழுதைய வாழ்வின் உண்மைநிலையையும், "மனுஷன் தன் நித்திய வீட்டுக்குப் போகிறதினாலே, துக்கங்கொண்டாடுகிறவர்கள் வீதியிலே" திரியும் காலத்திற்குப் பிறகு உள்ள வாழ்வின் உண்மைநிலையையும் நாம் ஒழுங்காக அறிந்துகொள்ளவேண்டும். *பிரசங்கி 12:5.*

வாழும் ஒவ்வொரு மனிதனும் ஆத்திகக் குடும்பத்திலோ (அ) நாத்திகக் குடும்பத்திலோ பிறந்திருக்கிறான். அநேகச் சந்தர்ப்பங்களில் இந்தக் குடும்பப் பின்னணியின் அடிப்படையிலேயே அவன் / அவள் இந்த "உலகத்தை பார்க்க" பழகிக்கொள்கிறான்/ள். ஆத்திகர்கள் "சூரியனுக்குக் கீழே" நாம் வாழ்கின்ற வாழ்க்கை முடிந்த பிற்பாடும் தொடர்கிறது என்று நம்புகின்றனர். நாத்திகர்கள் அப்படியெல்லாம் நம்புவதில்லை. இரண்டு வகையான மக்களுமே "நன்மை மற்றும் தீமை" என்னென்ன என்பதை பகுத்தறியும் சக்தியைப் பெற்றிருக்கின்றனர். ஆதாம், ஏவாள் தேவனுடனான உடன்படிக்கையை உடைத்துப்போட்டதன் காரணமாக, ஆத்திகர்களும், நாத்திகர்களும் நன்மை என்ன தீமை என்ன என்பதை





பகுத்தறிந்து செயல்படக்கூடிய சக்தியையும் அந்தக் கடமையையும் பெற்றுக்கொண்டனர். *ஆதி. 2:16,17;3:22.* தேவன் அவர்களுடைய மனச்சாட்சியில் கொடுக்கும் உணர்வுகள் மூலமாக – பல சமயங்களில் வலிகள் மூலமாக இவைகளைப் பற்றிய விழிப்புணர்வு உண்டாக்குகிறார். ஒரு மனிதனுடைய மனச்சாட்சிக்குள் ஏற்படுகின்ற குற்ற உணர்வு வலியை உண்டாக்குவதால் அவனுடைய மகிமைக்கான தேடலை தடுத்துவிடுகின்றது. *ரோமர் 2:14,15.*

தத்துவ ஞானிகள் எது நல்லது, எது நல்லதன்று என்று தீர்மானிக்கும் முயற்சியினை ஆண்டாண்டு காலமாகச் செய்து வருகிறார்கள். அவர்களை ஞானிகள் என்றும் பண்டிதர்கள் என்றும் நாம் சொல்லுகிறோம். மனுஷ ஞானத்தின்படி அவர்களும் சாலொமோனைப் போல ஞானிகளாக இருக்கிறார்கள். "கிறிஸ்துவுக்குள்" இருக்கின்ற தேவனுடைய ஞானத்தை இவர்கள் ஏற்றுக்கொள்ளாததினால், தேவனை, தெய்வீகத் தன்மை உடையவராக "அறிந்துகொள்வதில்" இவர்கள் தோற்றுப்போனார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னான். *1 கொரி. 1:20-25.*

நாத்திகக் குடும்பங்களில் வாழ்பவர்கள் மனுஷனுடைய உபதேசங்களை பின்பற்றலாம் அல்லது அவர்களுடைய "பார்வைக்கு சரி" என்று தெரிகின்ற வாழ்க்கையை வாழலாம். *நீதி. 14:12.* நாத்திகப் பெட்டிக்குள் அடைக்கப்பட்டிருக்கிறோம் என்று யாருக்கெல்லாம் தெரிகிறதோ அவர்களெல்லாம் தேவனைக் குறித்துக் கேள்விப்படுவதின் மூலமாகவோ, அவரை குறித்துப் புத்தகங்களை வாசிப்பதின் மூலமாகவோ தங்களை விடுவித்துக்கொள்ளவேண்டும். அவர்கள் இயற்கையை பார்க்கின்ற பொழுது, சகல வல்லமையும் பொருந்திய ஒரு சக்தி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று அறிந்துகொள்ளமுடியும், இருப்பினும், தேவனை, தெய்வீகத் தன்மை உடையவராக அறிந்துகொள்வதற்கு இது உதவி செய்யாது. *யோவான் 8:54,55; ரோமர் 1:20.*

ஆத்திகர்களை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1) ஒரு தெய்வ நம்பிக்கை உடையவர்கள் – இவர்கள் தேவன் ஒருவரே என்று நம்புகிறார்கள்.
2) பல தெய்வ நம்பிக்கை உடையவர்கள் – பல தேவர்கள் இருக்கிறார்கள் என்று இவர்கள் நம்புகிறார்கள்.

நசரேயனாகிய இயேசுவாக மேசியா இந்தப் பூமிக்கு வந்த பிறகும், வருமுன்பும் எகிப்தியர்களும், ரோமர்களும், கிரேக்கர்களும் பல தெய்வ நம்பிக்கை உடையவர்களாகவே வழிபட்டுவந்தார்கள். தற்காலத்தில் கிரேக்க நாட்டிலும் இன்னும் சில இடங்களிலும் பல தெய்வ வழிபாடு இருந்துவருகிறது. நவீன பல தெய்வ நம்பிக்கை உடைய குழுக்கள் இந்தியாவிலும் இன்னும் சில நாடுகளிலும் உற்சாகமாகச் செயல்பட்டு வருகின்றன. ஒட்டு மொத்தமாக இந்தக் குழுக்களை சேர்ந்தவர்கள் இந்து சமயம் என்ற அடையாளத்தோடு இந்தியாவில் வாழ்கின்றார்கள். முறை சார்ந்த மதங்களுக்குரிய பிரத்தியேகக் குணங்கள் இந்து மதத்திற்கு இல்லாததினால், சிலர் இதை ஒரு வாழ்க்கை நெறி என்றே குறிப்பிடுகின்றனர். இந்து சமய இலக்கியம் வேதங்களையும், வேதாந்தங்களையும், உபநிடதங்களையும், பகவத் கீதையையும் உள்ளடக்கியது.

ஆப்பிரிக்கப் பழங்குடியினர் பின்பற்றி வந்த சமயம், ஆவி உலகக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. இது இலக்கியம் இல்லாத ஒரு சமயம். விலங்குகளிலும், செடிகளிலும் இன்னும் சில உயிரற்ற பொருட்களிலும் “ஆன்மீக சாராம்சம்” இருந்ததாக அவர்கள் நம்பினர்.

கிழக்கத்திய நாடுகளில் இன்னும் பல வகையான சமயங்கள், பல தெய்வ நம்பிக்கையை மக்களுக்கு அளித்துவருகின்றன. “சூரியனுக்குக் கீழே” தற்காலத்தில் வாழ்ந்துவரும் மக்கள், கூட்டம் கூட்டமாக வெவ்வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து வாழ்ந்துவருவதால், புவி சார்ந்த அடையாளங்களின் அடிப்படையில் சமயங்களை வேறுபடுத்திக் கூறுவது கடினம். மேற்கத்திய உலகத்தில் அடுக்கு மாடி கட்டிடங்களில் வாழ்ந்து வரும் இரு வகையான தெய்வ நம்பிக்கை உடைய குடும்பங்களில் இக்காலத்திய





குழந்தைகள் வளர்ந்துவருகின்றனர்.

பல தெய்வ நம்பிக்கை பெட்டிக்குள் அடைக்கப்பட்டிருக்கிறோம் என்று உணர்கின்ற மக்கள் பரிசுத்த வேதாகமம் அல்லது குரான் புத்தகத்தை வாசித்து அல்லது கேட்டுப் புரிந்துகொள்வதின் மூலம் அந்தப் பெட்டியை தகர்த்து எறியமுடியும். *1 கொரி. 8:5,6.* இலக்கியம் இல்லாத சமயத்தை சார்ந்தவர்களாக மக்கள் இருக்கும் பட்சத்தில், வேறொரு மனிதன் வழியாக அந்த சமயத்துக்குரிய காரியங்களை கேட்டு, கவனித்து, கற்றுக்கொள்வது அவர்களுக்கு அவசியமாகும். பகாய் (Bahai) சமயத்தவர் “ஒளியின் சீஷர்கள்” என அழைக்கப்பட்டனர். இவர்கள் தொடர்ச்சியான வெளிப்பாட்டில் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கிறார்கள். மற்ற மனிதர் சொல்வதை கவனிக்கின்ற இந்தச் செயல் தான் இன்றளவும் மக்கள் “வாழ்க்கைப் பெட்டிக்குள்” அடைபட்டிருக்கக் காரணமாய் இருக்கின்றது. இதுவே சமயங்களில் பிரிவினை உண்டாக்குவதற்குக் காரணமாய் இருக்கின்றது. தாங்கள் சார்ந்திருக்கிற சமயத்துக்குரிய புத்தகங்களை படித்து, கற்றுக்கொள்ள முடியாதவர்கள், அவைகளை அறிந்திருக்கிற மற்றவர்களிடம் கேட்டு, கவனித்து, கற்றுக்கொள்ளவேண்டியது அவசியம். இப்படிச் செய்யாமல் விடுவதே, காலம் காலமாகக் கள்ளத்தீர்க்கதரிசிகள் மக்களை ஏமாற்றி, லாபகரமாகப் பிழைப்பு நடத்துவதற்கு ஏதுவாக இருந்து வருகின்றது. *2 பேதுரு 2:1-3.* கிறிஸ்தவ விசுவாசிகள் மற்ற சமயங்களால் அவதிப்படுவதை விட, தங்களுக்குள் இருக்கும் அதிகமானப் பிரிவினைகளினாலேயே மிகுதியும் அவதிப்பட்டுவருகின்றனர். கிறிஸ்தவர்கள் வேதத்தை வாசித்துப் புரிந்துகொள்ளக் கற்றுக்கொண்டால், கிறிஸ்தவ மார்க்க வேலைகளை பணம் சம்பாதிக்கும் நோக்கத்தோடு செய்துவருபவர்களை அவர்கள் ஆதரிக்கமாட்டார்கள். *2 கொரி. 2:17.*

உலகளவில் கிறிஸ்தவ மார்க்கம், யூத மார்க்கம், இஸ்லாமிய மார்க்கம் ஆகியவை ஒரு தெய்வ நம்பிக்கை உடையவைகளாகக் கருதப்படுகின்றன. தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்டவைகள் என்று சொல்லப்படுகின்ற சமயம் சார்ந்த புத்தகங்கள் இவர்களிடம் இருக்கின்றன. இஸ்லாமியர்கள் குரான் புத்தகத்தை வைத்திருக்கின்றனர்.

கிறிஸ்தவர்களும், யூதர்களும் பரிசுத்த வேதாகமத்தை வைத்திருக்கின்றனர்; இருப்பினும் யூதர்கள் புதிய ஏற்பாட்டுப் பகுதி தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்டது என ஏற்க மறுக்கின்றனர். இந்த மூன்று சமயங்களில் ஏதேனும் ஒன்றை சார்ந்த குடும்பத்தில் பிறந்தவர், தன்னை அடைத்திருக்கும் "வாழ்க்கைப் பெட்டியை" உடைத்தெறிய தீர்மானிக்கும் போது, தான் வணங்கும் தேவனைப் பற்றி மற்ற இரண்டு சமயங்களின் புத்தகங்கள் என்ன சொல்கின்றன என்பதைக் கற்றுக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது. இந்த மூன்று சமயத்தை சார்ந்தவர்களுமே ஒரே தெய்வ நம்பிக்கை உடையவர்கள் – ஒரே ஒரு கடவுள் மட்டுமே.

ஒரு யூத குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ஒருவர், நசரேயனாகிய இயேசு தான் கிறிஸ்துவா என்று தீர்மானிக்கவேண்டியது அவசியம். ஆகாரின் மகன் இஸ்மவேலின் சந்ததியைத் தவிர்த்து சாராளின் மகன் ஈசாக்கின் சந்ததியாரே தேவனுடைய பிள்ளைகள் என்ற முடிவோடு யூதர்கள் இருக்கிறார்கள். இஸ்லாமியர்கள் இஸ்மவேலோடு சம்பந்தப்பட்டவர்கள்.

கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து "கிறிஸ்தவ சபைகள்" என்று அழைக்கப்படுகிறவைகளில் ஒன்றை சார்ந்து வாழ்கின்ற ஒருவர், தேவனைப்பற்றி வித்தியாசமான சிந்தனையை அடையும்படியாக யூதருடைய பாரம்பரியங்களையும், இஸ்லாமியரின் குரானையும் கவனமாகப் படிக்கவேண்டியது அவசியம். அவர்கள் புதிய ஏற்பாட்டுக் கொள்கையை மட்டும் பார்க்காமல், அந்த இரு பிரிவினருடைய கொள்கைகளின் அடிப்படையில் "சூரியனுக்குக் கீழே உள்ள இந்த வாழ்க்கையையும்" மரணத்துக்குப் பிற்பாடு உள்ள வாழ்க்கையையும் பார்க்க முடிந்தால் மட்டுமே மாற்றம் உண்டாகும். இந்த இரு சமயங்களுமே சரியானவைகளாக அவர்களுக்குத் தெரிந்தால், இதில் எதைச் சார்ந்தவர்கள் தேவனுடைய மக்கள் என்று அடையாளம் காணவேண்டியது கட்டாயமாகிறது.

இயேசுவானவர் தம்முடைய பிதாவாகிய தேவனுக்கென்று தாம் கட்டின சபைக்குள் பிரிவினை ஏற்படுவதை வெறுக்கின்றார்; இதன் விளைவாக தங்களை தேவனுடைய மக்கள் என்று சொல்லிக்கொள்ளும்





எல்லா கிறிஸ்தவக் குழுக்களும் சரியானவைகளாக இருக்கமுடியாது. *யோவான் 17:20-23; 1 கொரி. 1:10* பார்க்கவும். இன்றைய இளைஞர்கள் எதிர்கொள்கின்ற ஒரு தர்மசங்கடமான சூழ்நிலை இது. அவர்கள் எதை தேர்ந்தெடுக்கிறார்கள்? அவர்கள் தங்களை அடைத்து வைத்திருக்கிற பெட்டியிலேயே தொடர்ந்து வாழ தீர்மானித்து இருக்கலாம் அல்லது அவர்கள் சத்தியத்தில் தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்களா என்பதை உறுதி செய்துகொள்ள தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்ளும் மாணவராக ஆகலாம். ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதின் அர்த்தமே கற்றுக்கொள்ளும் மாணவனாக இருப்பதில் தான் அடங்கியிருக்கிறது. என்னைக் குறித்தும் **என் வார்த்தைகளைக்** குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ, அவனைக்குறித்து மனுஷகுமாரனும் தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார். *லூக்கா 9:26, லூக்கா 8:21;10:21-24*, பார்க்கவும். "சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்" என்று இயேசு கூறினார். *யோவான் 18:37.*

சாலொமோன் சொன்னது சரி தான்: "மனுபுத்திரர் இந்தக் கடுந்தொல்லையில் அடிபடும்படிக்குத் தேவன் அதை அவர்களுக்கு நியமித்திருக்கிறார்." ஆதாமும், ஏவாளும் தேவனுடனான உடன் படிக்கையை உடைத்த பிற்பாடு இந்தப் பிரச்சனை பெரிதாக மாறியது. தேவனானவர் இயற்கையிலும், மனித குலத்துடனான தமது ஐக்கியத்திலும் தீவிரமான மாற்றங்களைக் கொண்டுவந்தார். ஆனால் தம்முடைய ராஜ்யத்தில் தமக்கென்று பிள்ளைகள் இருக்கவேண்டுமென்ற அவருடைய விருப்பம் இன்னமும் நீடித்திருந்தது. *ரோமர் 8:18-30* பார்க்கவும்.

"மற்றவரை சார்ந்திருக்கும் நிலைமை என்னும் பெட்டிக்குள்" அடைபட்டு, வேதத்தைக் கற்றுக்கொள்ளும் வழக்கத்தை மேற்கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்து, அப்பெட்டியை உடைத்து வெளிவரச் செய்வதே இப்பாடத் தொகுப்பின் நோக்கம். தேவனுடைய வார்த்தை தங்களுக்கு என்ன சொல்கிறது என்பதை தெரிந்துகொள்ள கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் மற்றவர்களையே

சார்ந்திருக்கிறார்கள்; ஆயினும் ஒவ்வொரு தனி மனிதனும் தேவனுடைய வார்த்தையை கேட்பதின் மூலமாகவே விசுவாசம் வருகிறது. ஒருவருடைய வாழ்க்கையில் அவர் கற்றுக்கொண்டு, விசுவாசித்து, முடிவு எடுக்கின்ற ஒரு குறிப்பிட்ட விஷயத்தின் அடிப்படையிலேயே அவர்களுடைய விசுவாசம் அமைகிறது. தேவனுடனான ஐக்கியத்தினாலும், அவருடைய வார்த்தையி னாலும் அமைக்கப்பெறும் வாழ்க்கையை வாழ்வது – இது தான் விசுவாசம். *1 யோவான் 1:5,6.*

தேவனுடைய சபை எந்த சபை என்பதைப் பற்றி விவாதிப்பது இந்தப் பாடத்தின் நோக்கமல்ல. **மனுஷனுடைய ஞானத்தால்** உருவாக்கப்பட்டதும், இந்நாளில் கிறிஸ்துவின் சீஷனாகிய ஒவ்வொருவனையும் அடைத்து வைத்திருக்கிறதுமான "கிறிஸ்தவ மார்க்கப் பெட்டியிலிருந்து" அவனை வெளிக்கொண்டுவரக்கூடிய காரியங்களை அவனுக்குக் கற்றுக்கொடுத்து அவனை சரியான பாதையில் நடத்துவதே இதன் நோக்கமாகும். *1 கொரி. 3:19-23.* கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பெரும்பாலான மக்கள் தங்களிடம் சம்பளம் பெற்று, தங்களுக்குச் சத்தியம் போதிக்கும் மனுஷர்களையே இன்றைக்குச் சார்ந்து வாழ்கிறார்கள். *எபிரெயர் 5:11-14.* சத்தியத்தை போதிக்கும் மக்களிலும் அநேகர் தங்கள் குடும்பங்கள் (அ) குடும்பங்கள் விரும்புகின்ற பல்கலைக்கழகங்கள் என்னும் "வாழ்க்கைப் பெட்டிக்குள்" அகப்பட்ட நிலைமையிலேயே இன்றளவும் போதித்து வருகின்றார்கள். இயேசு கிறிஸ்துவால் பரிசுத்த ஆவியானவர் மூலமாக பரிசுத்த வேதாகமம் தெரிவிக்கின்ற தேவனுடைய ஞானத்தைப் புரிந்துகொண்டு, அதன் அடிப்படையில் ஒவ்வொருவரும் வாழ்ந்து, தங்கள் "விசுவாசக் கதவினை' தேவனுடைய ஆளுகைக்கென்று விரிவாகத் திறக்கவேண்டும் என்பதே எங்களுடைய ஜெபமாயிருக்கிறது. *அப். 14:27; 1 கொரி. 2:10-16.*

வரிசை முறையான தலைப்புகளில் கிறிஸ்தவர்கள் படிக்கும் வகையில் இப்பாடத் தொகுப்பு அமைக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, முதல் பாடத்தின் தலைப்பு "சிருஷ்டிப்புக்கு முன்பாக தேவனுடைய மனதில் இருந்தது என்ன" என்று உள்ளது. இந்த உலகத்தையும், ஆதாமையும்





படைப்பதற்கு முன்பு தேவனுடைய மனதில் இருந்தது என்ன? தேவன் நம்மை படைத்ததற்கான நோக்கம் என்ன? தேவனுடைய வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இந்த தெய்வீகத் தகவலை புரிந்துகொள்வதில் தான் நமது வெற்றி அடங்கியிருக்கிறது. அந்தத் தகவலை நாம் தெளிவாகப் புரிந்துகொண்ட பிற்பாடு, நாம் கேட்க வேண்டிய கேள்வி இதுதான்: இந்தத் தகவலை நான் முழுவதுமாக நம்புகிறேனா? அடுத்ததாக நம்மைச் சுற்றி நெருக்குகிற சவால் இது: தேவன் என்னை படைக்கும் முன்பாக எனக்காக அவருடைய மனதிற்குள் இருந்ததைப் பற்றி நான் வாசித்து, கற்றுக்கொண்டு, விசுவாசிக்கின்ற சத்தியத்திற்கு என் வாழ்வு முழுவதையும் நான் அர்ப்பணிப்பேனா?

ஒருவர் தன்னை தேவன் படைத்ததற்கான நோக்கத்தில் விசுவாசம் வைக்கத் தீர்மானிப்பாரானால், அவர் வரிசை முறையான தலைப்புகளின் கீழ் தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறார். எடுத்துக்காட்டாக, மனுக்குலத்தை தேவன் படைத்ததற்கான நோக்கத்தில் அவருடைய விசுவாசம் உறுதிப்படுத்தப்பட்ட பிற்பாடு, அவர் ஜீவாத்துமாக்களை எப்படிப் படைத்தார் என்பதை கற்றுக்கொண்டு, விசுவாசத்தை வளர்த்துக்கொள்வதும் அவருக்கு அவசியம். *ஆதி. 1:27.* மற்றொரு பக்கத்தில் "மற்றவரை சார்ந்திருக்கும் நிலைமை என்னும் பெட்டிக்குள்" அகப்பட்டிருக்கும் ஒரு கிறிஸ்தவன், தான் கேள்விப்படும் தேவனுடைய வார்த்தைக்கு இணங்க தன்னுடைய விசுவாசத்தை சோதித்துப்பார்க்க விரும்பாவிட்டால், அந்தப் பெட்டிக்குள்ளேயே தொடர்ந்து "அகப்பட்டு" கிடக்கவேண்டியதாயிருக்கும். *2 கொரி. 13:5.* மற்றவர்கள் நம்பிக்கையை சார்ந்தே இப்படிப்பட்டவர்களுடைய வாழ்க்கை முடிந்து விடுகிறது.

நாம் யாவரும் பல விதங்களில் தேவனையும், மற்றவர்களையும் சார்ந்திருக்கிறோம். "மற்றவரை சார்ந்திருக்கும் நிலைமை என்னும் பெட்டி' என்பதின் அர்த்தம் இதுவல்ல. இந்த விதமான பிரச்சனையுடைய மக்கள், வாழ்க்கையில் தங்களுக்குரிய பொறுப்புகளை நிறைவேற்றும் கடமையை மற்றவரிடம் விட்டுவிடத் தீர்மானிக்கிறார்கள். இது போன்ற பெட்டிக்குள்

அடைபட்டு வாழ்கின்ற கிறிஸ்தவர்களால் தான் சபையிலே பிரிவினைகள் அதிகரித்திருக்கின்றன. சபையை தங்கள் சொந்தப் பெருமைக்காகவும், பண ஆசைக்காகவும் பயன்படுத்துபவர்களும் அதிகரித்திருக்கிறார்கள். *2 கொரி. 11:18-21; 2 தீமோத்தேயு 2:14-16.* “ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதை யாய்க் கவனிக்கவேண்டும்.” *எபிரெயர் 2:1.*

தேவன் நம்மை ஏன் படைத்தார்? எப்படிப் படைத்தார்? இது போன்ற கேள்விகளுக்கு இந்தப் பாடத்தொகுப்பின் வாயிலாக பதில்களை நாம் அறிந்துகொள்ளலாம். தேவனுடைய படைப்பில் எது தவறாகப் போனது என்பது பற்றியும், பாவம் மற்றும் மரணம் என்ற பிரச்சனைகளைத் தீர்க்க அவர் என்ன செய்தார் என்பதைப் பற்றியும் நாம் புரிந்துகொள்ள முயற்சிப்போம். இந்தக் கேள்விகளுக்கு தேவனுடைய வார்த்தையில் எளிமையான பதில்கள் இருக்கின்றன; இருப்பினும் அந்தப் பதில்களை கற்றுக்கொள்வதோடு கூட இன்னும் சில காரியங்களையும் செய்யவேண்டும். முதலாவதாக, தேவனுடைய வார்த்தை எந்தப் பொருளில் எழுதப்பட்டுள்ள தோ, அதை உள்ளபடியே புரிந்துகொண்டு விசுவாசிக்கவேண்டும். அடுத்ததாக, நாம் கற்றுக்கொண்ட சத்தியம் நமக்குள் வரும்படி நம் “விசுவாசக்கதவினை” விரிவாகத் திறக்கவேண்டும். *ரோமர் 10:17.* இந்த விதமாக நாம் படிப்போமானால், “சூரியனுக்குக் கீழே” நாம் வாழ்கின்ற போதே தேவனுடைய குடும்பத்தில் அங்கத்தினர்களாகவும், அவருடைய ராஜ்யத்தில் குடிமக்களாகவும் நாம் இருக்கமுடியும். *பிலிப்பியர் 3:20,21.*